31st March 1969]

(இ) 1968-ஆம் ஆண்டு எப்ரல் மாதம் நடைபெற்ற தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு எப்பொழுது சான்றிதழ் கொடுக்கப்பட்டது ?

(உ) மிகுந்த கால தாமதம் ஏற்படுவதால் இச்சான்றிதழை சர்வீஸ் கமிஷன் எழுத்தர் தேர்வுக்கு சமர்ப்பிக்க முடியாமல் இருக்கும் நிலைமை யினைக் குறித்து அரசினர் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) இல்லை.

(இ) 1969-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கொடுக்கப்பட்டது.

(உ) இல்லை.

Representation of the certified Goldsmiths' Association

* 348 Q.—THIRU K. RAMAKRISHNA ACHARI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state

(a) whether the Government have received a complaint from the certified Goldsmiths' Association, Madurai stating that there are passages derogatory to the Goldsmiths in the English non-detailed book entitled 'The Tales for the Young' written by Thiru Kalyanam, selected by the Text-Book Committee of the Government and published in the issue of the *Fort St. George Gazette*, dated 17th May 1967; and

(b) if so, the action taken thereon by the Government?

மதுரை சான்றிதழ் பெற்ற பொற்கொல்லர் சங்க முறையீடு

திரு. கே. இராமகிருஷ்ண ஆச்சாரி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழக அரசாங்க பாட புத்தக பரிசீலனைக் குழுவால் தேர்வு செய்யப்பட்டு 17–5–1967-ல் வெளியான கெஜட்டில் பிரசுரமான திரு. கல்யாணம் என்பவர் எழுதிய "இளைஞர்களுக்கான கட்டுக் கதைகள்" (The tales of the young) என்ற ஆங்கில துணைப் பாடத்தில் நகைத் தொழிலாளர்களை இழிவுபடுத்தும் வாசகம் உள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டு, மதுரை சர்டிபிகேட் பொற்கொல்லர் சங்கத்தாரால் அனுப்பப்பட்ட மனு, அரசாங்கத்தால் பெறப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) அரசு இது குறித்து நாட்டமுடன் ஆய்வு செய்து, இது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான காரணம் எதுவுமில்லை என்று கருதியது.

Shastri Nagar, Ashok Nagar and Indira Nagar

* 349 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) whether Shastri Nagar, Ashok Nagar, Indira Nagar etc. which are the neighbourhood areas around Madras City are situated within the Corporation limits;

(b) the authority which has provided these areas with drinking water facility; and

(c) whether any tax is being collected for provision of water supply?

சாஸ்திரி நகர், இந்திரா நகர், அசோக் நகர்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரைச் சுற்றியுள்ள புற நகர்களான சாஸ்திரி நகர், அசோக் நகர், இந்திரா நகர் முதலிய நகர்கள் சென்னை மாநகராட்சி எல்லையில் அமைந்திருக்கிறதா ?

(இ) இவ்விடங்களில் யாரால் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது ?

(உ) குடிதண்ணீர் வசதிக்காக வரி வசூலிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) சாஸ்திரி நகர், இந்திரா நகர், அசோக் நகர் ஆகியவை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியப் பொறுப்பின் கீழ் உள்ளன. இந்நகர்கள் ஒரு பகுதி சென்னை நகர எல்லைக்குள்ளேயும், ஒரு பகுதி நகர எல்லைக்கு வெளியேயும் அமைந்துள்ளன.

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

(உ) வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு சென்னை மாநகராட்சி விடுத்துள்ள வரிக்கேட்பு அறிவிப்புகளில் சொத்து வரியும், தண்ணீர் வரி, விளக்கு வரி போன்ற பொதுக் காரியங்களுக்கான வரியும் அடங்கியுள்ளன.

Purchase of bulbs by Village Panchayats

* 350 Q.—THIRU N. SUNDARESA THEVAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to issue order to the Village Panchayats electrified by the Tamil Nadu Electricity Board to purchase new bulbs themselves, to replace immediately the fused bulbs of the Panchayats?

கிராமப் பஞ்சாயத்துக்களே பல்புகளை வாங்கல்

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் மின்சாரம் வழங்கப்படுகின்ற கிராமப் பஞ்சாயத்துக்களில், அடிக்கடி பல்புகள் தீய்ந்து விடுவதால், அவைகளை உடனடியாக மாற்ற பஞ்சாயத்துக்களே பல்புகள் வாங்கி செப்பனிட்டுக் கொள்ளலாம் என உத்தரவிடும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. என். சுந்தரேசத் தேவர் : சாதாரணமாக மின்சார வாரியத்தினர் மாதம் ஒன்றுக்கு பஞ்சாயத்துகளுக்கு எத்தனை பல்புகளைப் போடுகிறார்களோ அதன்மீது தொகை வசூலிக்கப்படுகிறது. ஆனால் மாத ஆரம்பத்திலேயே நான்கைந்து நாட்களுக்கெல்லாம் பல்புகள் ப்யூஸ் ஆகின்றன. மாதம் பூராவும் கிராமங்கள் ஒளியில்லாமல் இருந்தாலும்கூட மாற்று பல்புகள் போடாமல் ப்யூஸ் ஆன பல்புகளை அப்படியே விட்டு விடுகிறார்கள். இந்த முறையை உடனடியாக நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ? இதைத் தவிர்க்கும் வகையில் பஞ்சாயத்து கூட்டு மன்றங்களில் கூட்டு மன்றம் வாயிலாக இரண்டு மின்சார வாரிய ஆட்களை நியமனம் செய்தால் இந்தப் பஞ்சாயத்து யூனியனுக்கு வருகின்ற புகார்களை உடனுக்குடன் அங்கங்கே சென்று பழுது பார்க்கச் செய்கின்ற நிலைமை ஏற்படும். அதைப் பரிசீலிக்க அரசாங்கம் முன்வருமா ?